**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 135/2019**

PW2 –ராஜேந்திரன், த/பெ.குப்புசாமி
நாள்–14.03.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

வா.சா.ஆ.1–ல் உள்ள புல எண், நிலத்தின் வகைபாடு, அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புல எண் தெரியுமா என்றால் 94 ஆகும். நிலத்தின் வகைபாடு என்ன என்றால் நஞ்சையாகும். அதன் விஸ்தீரணம் என்ன என்றால் 3 செண்ட் மற்றொறு இடம் 3 செண்ட் ஆகும். வில்வராயநத்தத்தில் இருந்து வள்ளுவர் தெரு எவ்வளவு துாரம் என்றால் வள்ளுவர் தெருவே வில்வராயநத்தத்தில்தான் உள்ளது. நான் என்ற தொழில் செய்து வருகிறேன் என்றால் தட்சுவேலை செய்து வருகிறேன். வாதி வீட்டில் தட்சுவேலை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எல்லார் வீட்டிலும் செய்துள்ளேன். எனது குடும்பத்தார்கள் யாராவது வாதி வீட்டில் வேலை செய்கிறார்களா என்றால் இல்லை. நான் தொடர்ந்து வாதி வீட்டில் வேலை செய்து வருகிறேன் என்றும், வாதி கேட்டுக்கொண்டதிற்கு இணங்க வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**